# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:8

✱ ✱ ✱ ✱ ✱ ✱

## பற்றி எரிகையிலே.!

ஏறு நீ தம்பி, ஏறடா மேலே—
எவன்வந்து உன்வழி மறிக்கிறான், பார்ப்போம்!
அண்ணன் வீடு தீப்பற்றி எரிகையிலே,
'அய்யோ அண்ணா!' என்று
அழுதுகொண்டே ஓடிவந்து
காலைக் கட்டிக் கொண்டானாம் ஒருதம்பி;
உடன்பிறந்தே கொல்லும் நோய்!
இவன்போல எழுந்துவந்து
எத்தனை கந்தல்கள்
வழிமறிக்கட்டுமே உன்னை,—
மாரடித்துச் சூழட்டுமே உன்னை
நிற்பாயோ அங்கே,
நெருப்பு அணைக்கப் புறப்பட்டிடாமல்,
தாயகத்தை நெருப்புச் சூழ்கையிலே
சஞ்சலக் கதைகள் ஏதடா அங்கே?-
தட்டிக் கழிப்புகள் ஏதடா அங்கே?
சுற்றி வளைத்துச் சொற்களை வீசிச்
சுக வளவுகள் எடுத்துக்கட்டும்
சோதாத் தனங்கள் ஏதடா அங்கே?
அந்நியனின் அழுக்குப் பாதம்
உன்தாயின் தூய மார்பின் மேல்
ஊன்றி அழுத்தி உயிரைப் பறிக்கையில்,
நான் முன்னால் போய்ச் செத்தால்
''என் தம்பிக்கு என்ன ஆகுமோ?'' என்று
''என் தங்கைக்கு என்ன ஆகுமோ?'' என்று
சாக்குருவிக் கணக்குப் போடுவாயா?—
சதக்கென்று அவன் காலை வெட்டி எறிவாயா?
போதும், போதுமடா தம்பி;
புல்லர்களின் சொல் கேட்டுப்
பொறுமை பொறுமைகள் சுமந்தது போதும்!
அள்ளி எறி, ஆர்த்து எழு;—
பற்றிய நெருப்பு வற்றிட வளர்ந்து ஏறு நீ!

—முன்னவர் சாலை இளந்திரையன்

1983 ஆனி

கொடுதலை! கொடு உயிர்! விடுதலை குமிழ்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

## தேர்தல் மயக்கம் தெளிகிறது.

மீண்டும் எங்கள் தாயகத்திற்கு தீ இடப்பட்டிருக்கிறது; மீண்டும் எங்கள் மக்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன; மீண்டும் எங்கள் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழீழத்தைப் பிணைத்துள்ள அடிமை விலங்குகள் உடைக்கப்படும் வரை ஆக்கிரமிப்பு சிறிலங்கா அரசின் கூலிப் படைகள் அப்பாவித் தமிழ் மக்களுக்கு இழைக்கும் அக்கிரமங்கள் தொடரும் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இத்தனை நடந்தும் இன்னும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளாமல் அக்கறையற்ற பார்வையாளராக மாத்திரம் தமிழ் மகன் இருக்க முயல்வானால் அது அடுத்த கட்டமாக தமிழீழத்தை மற்றொரு பெய்ரூத்தாக மாற்றும் என்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த அவல இருளினுள்ளும்... அடிமை இருளினுள்ளும் இடையே ஒரு சிறு ஒளிக் கீற்று. எம்மக்கள் அக்கொடுமை அரசுக்கெதிரான போராட்டத்திலே மாத்திரமல்ல அர்த்தமற்ற தேர்தல் அரசியல் விளையாட்டுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அளவிற்கும் முன்வரத் தொடங்கி விட்டார்கள் என்பதுதான் அது. ஆக்கிரமிப்பு அரசினால் நடத்தப்படும் இத்தகைய தேர்தல்கள் நமக்கு அழிவுகளையும், அவலங்களையும் தவிர வேறெதனையும் எமக்குத் தரவில்லை என்பதை எம் மக்கள் உணர்ந்து கொண்டதுடன் தேர்தல் மாயையிலே சிக்கியவர்களுக்கு உணர்த்தவும் முற்பட்டுவிட்டார்கள்.

தமிழீழத்தை ஆக்கிரமித்திருக்கும் சிறிலங்கா அரசு இயந்திரத்தின் நிர்வாகத்திற்கு நாம் கட்டுப்பட்டவர்களல்ல என்பதை மக்களே உலகுக்கு எடுத்துக்காட்டும் பணி யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆரம்பமாகியுள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை முற்றாகவே அர்ப்பணித்து கெரில்லா அடிப்படையில் போராடிவரும் இளைஞர்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்து பெரும்பான்மையான தமிழ்மக்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரித்துள்ளனர். இப்பகுதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த வாக்காளர்களில் 10%க்கும் குறைவானவர்களே வாக்களிப்பில் பங்கு கொண்டுள்ளனர். பல ஆயிரக்கணக்கான வாக்குகளைக் கொண்ட பகுதியில் சில நூறு வாக்குகளே பதிவாகியுள்ளன. இந்நிகழ்ச்சி சாதாரணமானதொன்றல்ல. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இறுகிய காலத்தில் கிட்டிய இரு பெரும் அரசியல் வெற்றி. இலத்தீன் அமெரிக்காவில் இன்று விடுதலைப் போராட்டத்தில் பெருவெற்றிகளைக் குவித்துவரும் சல்வடோரின் இடதுசாரிக் கொரில்லாக்களுக்குக் கூடக் கிடைக்காத வெற்றி எமது போராளிகளின் வேண்டுகோளுக்குக் கிடைத்துள்ளது.

அத்தோடு எமது மக்கள் விடுதலையைத் தவிர எமக்கு வேறெதுவும் வேண்டாம் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். அபிவிருத்தி... நிர்வாக... பேச்சுவார்த்தைகள்... உடன்படிக்கைகள்... இவை எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விடுதலையின் அவசியத்தை விளக்கியுள்ளனர். அதுமாத்திரமல்ல தாங்கள் மக்கள் தலைவர்கள் என்று மமதையுடன் வெட்டிப் பேசியவர்களது பேச்சுக்களை மக்கள் ஒதுக்கித் தள்ளி உண்மைப் போராளிகளின் வேண்டுகோளுக்கு மதிப்பளிக்கத் தொடங்கியுள்ளனர்.

எனவே இதுவரைகாலமும் தேர்தல் மாயையிலே மயங்கிக்கிடந்த இயக்கங்களும், தலைவர்களும் இனியாவது மக்களின் விருப்பு விடுதலையைத் தவிர வேறொன்றிலுமில்லை என்ற உண்மையை உணர்ந்து ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஒற்றுமையுடன் ஈடுபட வேண்டும். அது மாத்திரமல்ல இப்போது கிடைத்த இந்த பகிஷ்கார வெற்றி தமிழீழம் முழுவதும் விஸ்தரிக்கப்பட வேண்டும். ஒன்றில் ஆக்கிரமிப்பு அரசநிர்வாகம் தமிழீழத்தில் செயலிழந்து போவதற்கான முதற்படி இதுவே. அத்தோடு அர்த்தமற்ற தேர்தல் விளையாட்டுக்களால தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தாமதப்படுத்தப்படுவதும்... தேர்தல்கள் தோறும் எம்மக்கள் அவலங்களைச் சந்திப்பதும் தவிர்க்கப்படும்.

அடிமை இருளினூடாகத் தெரிகின்ற இந்த மெல்லிய ஒளிக்கீற்று விரைவில் விடுதலைச் சூரியனை பிரசவிக்கும் என்ற நம்பிக்கையுடன் விடுதலைப் போராட்டத்தின் பங்காளர்களாக நம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்கை உடைக்கும் பணியை அனைவரும் தொடங்குவோம்.

- காந்தன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

## ✸ தேர்தல் பகிஷ்கரிப்புக் கோரிக்கைக்கு பெரும் வெற்றி!

18.05.83 இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களைப் பகிஷ்கரிக்குமாறு தீவிரவாத இளைஞர்களும் இதர தமிழீழ இயக்கங்களும் விடுத்த வேண்டுகோளுக்கு யாழ். மாவட்டத்தில் பெரும் வெற்றி கிட்டியுள்ளது. தமக்கு வாக்களிக்குமாறு வேண்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையை அலட்சியம் செய்து 86%மான மக்கள் தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளனர். விடுதலைப் பாதையில் கூட்டணி தடம் புரண்டு செல்வதை இத்தேர்தல் முடிவுகள் தெளிவாக்குகின்றன.

**தேர்தலை பகிஷ்கரித்த மக்களின் விகிதாசாரம்...**

| | |
|---|---|
| பருத்தித்துறை | - 99 வீதம் |
| வல்வெட்டித்துறை | - 93 வீதம் |
| சாவகச்சேரி | - 85 வீதம் |
| யாழ்ப்பாணம் | - 86 வீதம் |

## தமிழீழ உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மீண்டும் கூட்டணி வசம்...

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மாநகரசபைகளையும் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, திருமலை, வவுனியா நகரசபைகளையும் கூட்டணி உள்ளூராட்சித் தேர்தலில் தன் வசமாக்கியுள்ளது. திருமலை நகரசபையில் கூட்டணிக்கு 9 இடங்களும், ஐ.தே.க.வுக்கு 2 இடங்களும், சு.க.வுக்கு 1 இடமும் கிடைத்துள்ளது. மட்டக்களப்பு மாநகரசபையில் கூட்டணிக்கு 16 இடங்கள்; ஐ.தே.க.வுக்கு 7 இடங்கள். வவுனியா நகரசபையில் கூட்டணி வேட்பாளர்கள் 11 பேரும் வெற்றி பெற்றுள்ளனர். யாழ். மாநகரசபையின் 23 இடங்களும் சாவகச்சேரி நகரசபையின் 11 இடங்களும் வல்வெட்டித்துறை நகரசபையின் 9 இடங்களும் கூட்டணிக்கே கிட்டியுள்ளன. பருத்தித்துறையில் 7 இடங்கள் கூட்டணிக்கும் 2 ஐ.தே.க.வுக்கும் கிட்டியுள்ளது.

### யாழ் மாவட்ட வாக்களிப்பு.

**யாழ் மாநகரசபை**

யாழ்ப்பாண மாநகரசபையின் மொத்த வாக்காளர் தொகை 65,921 இதில் கட்சிகள் பெற்றவாக்குகள் வருமாறு;—

| | |
|---|---|
| கூட்டணி — | 8594 |
| ஐ.தே.க. — | 830 |
| காங்கிரஸ் — | 272 |

**சாவகச்சேரி**

சாவகச்சேரி நகரசபையின் மொத்த வாக்காளர் தொகை 13,059 ஆகும், இதில் கட்சிகள் பெற்ற வாக்குகள்,

| | |
|---|---|
| கூட்டணி — | 1718 |
| காங்கிரஸ் — | 109 |
| ஐ.தே.க. — | 38 |

**வல்வெட்டித்துறை**

வல்வெட்டித்துறை நகரசபையின் மொத்த வாக்காளர் தொகை 8954। இதில் கட்சிகள் பெற்ற வாக்குகள் விபரம்.

| | |
|---|---|
| கூட்டணி — | 173 |
| த. காங்கிரஸ் | 07 |
| ஐ.தே.க. — | 04 |

**பருத்தித்துறை**

பருத்தித்துறை நகரசபையின் மொத்த வாக்காளர் தொகை 10,[illegible]25, இதில் கட்சிகள் பெற்றவாக்குகள்;

| | |
|---|---|
| கூட்டணி — | 82 |
| ஐ. தேக — | 37 |
| சுயேச்சை — | 5 |
| நவ. சமசமாஜி — | 1 |

தருமாறும் தனிமையை நிராகரிக்கும் பணி வடபகுதியில் புதுவேகத்துடன் முடுக்கிவிடப்பட்டதை தேர்தல் முடிவுகள் தெளிவாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழப்ப நிலையில் த.வி. கூட்டணி.

தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளூராட்சித் தேர்தலின் முன் அறிவித்த வேட்பாளர் பட்டியல்களிலுள்ள பெரும்பான்மையோர் தீவிரவாத இளைஞர்களின் வேண்டுகோள்களை ஏற்று போட்டியிலிருந்து விலகிவிட்டனர். தற்போது தேர்தல்கள் முடிவுகளையடுத்து உள்ளூராட்சிமன்றத்தின் பதவிகளை யாருக்கு வழங்குவது என்பதில் கூட்டணிக்குப் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதே வேளையில் இளைஞர்களை திருப்திசெய்வதற்காக யாழ். மாநகரசபையின் புதிய மேயராக யாழ். பா. உ. திரு. வை. யோகேஸ்வரன் கூட்டணியால் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இடைத்தேர்தல்களில் ஐ.தே.க.வுக்கு வெற்றி.

சிறீலங்காவின் 18 தொகுதிகளில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் ஐ.தே.க தனது ஆட்சியதிகாரங்களைப் பயன்படுத்தியும் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டும் 14 தொகுதிகளில் மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. சுதந்திரக்கட்சி 3 தொகுதிகளையும் மக்கள் ஐக்கிய முன்னணி 1 இடத்தையும் கைப்பற்றின. இத்தேர்தல்களில் போட்டியிட்ட ஜே.வி.பி, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தோல்வியடைந்துள்ளன. பல இடங்களில் ஐ.தே.க மிகக் குறைந்த மேலதிக வாக்குகளாலேயே வெற்றி பெற்றது. மஹர தொகுதியில் சு.க.வின் நடிகர் விஜய குமாரதுங்க 45 வாக்குகளாலும், எகலிய கொடவில நவசமசமாஜக் கட்சியின் வாசுதேவ நாணயக்கார 754 வாக்குகளாலும் தோல்வியடைந்தனர். நாட்டின் பல பகுதிகளிலும் கொலை, துப்பாக்கிச் சூடு, தாக்குதல்கள் போன்ற காடைத்தனங்கள் ஐ.தே.க.வினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

## ✸ தமிழீழ விடுதலைப் போராளிகளிடம் மீண்டும் சிறீலங்கா இராணுவம் தோல்வி!

உள்ளூராட்சித் தேர்தல் தினமான 18.05.83 அன்று கந்தர்மடத்திலுள்ள வாக்குச்சாவடியொன்றின் மீது தீவிரவாத இளைஞர்கள் தாக்குதல் நடத்தியபோது காவலுக்கு நின்ற இராணுவத்தினரும், பொலிசாரும் ஒளிய முயற்சித்தனர். அப்போது துப்பாக்கிப் பிரயோகத்தை நிறுத்திய இளைஞர்கள் அவர்களை நேரடிச் சமருக்கு வரும்படி சவால் விட்டனர். அதன் பின் இருதரப்பினருக்கும் 10 நிமிடங்களுக்கும் அதிகமாக துப்பாக்கிச் சமர் நடைபெற்றிருக்கிறது. இத்தாக்குதலில் இராணுவ கோப்ரல் ஜயவர்த்தன கொல்லப்பட்டார். பொலிஸ், இராணுவ வீரர் இருவர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சமரில் தோல்வியடைந்த அரசபடைகள் அப்பாவித் தமிழ்மக்களைப் பழிவாங்கி தமது வெறியைத் தணித்துக்கொண்டனர். அதே வேளையில் விடுதலை வேட்கை கொண்ட [illegible] வெல்வது சிறீலங்கா படையினருக்கு கஷ்டமானது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "வட பகுதியில் இராணுவ அடக்குமுறையே பயங்கரவாதத்திற்குக் காரணம்..." - வாசுதேவா

வட பகுதியில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் மத்தியில் பீதியும், பயமும் நிலவுகின்றன. தமிழ் தீவிரவாதிகளின் பயங்கரவாதச் செயல்களுக்கு அரசாங்கத்தின் கொடிய இராணுவ அடக்குமுறையே காரணமாகும் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார். அதே வேளையில் தமிழ் தீவிரவாத இளைஞர்கள் தொடர்பான சிறிலங்கா பொலிசாரின் விசாரணைக்கு விரைவில் வாசுதேவாவும் உள்ளாகலாம் என செய்திகள் கூறுகின்றன.

## அவசரகால நிலைப் பிரகடனத்திற்கு கூட்டணி மறைமுக ஆதரவு.

தேர்தல்கள் தினமான 18.05.83 மாலை பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலைக்கு த.வி.கூட்டணி மறைமுக ஆதரவை அளித்துள்ளது. இது தொடர்பாக சிறிலங்கா பாராளுமன்றத்தில் நடந்த வாக்கெடுப்பில் கூட்டணி எதிர்த்து வாக்களியாமல் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் தனது ஆதரவை அரசுக்கு அளித்தது. கம்யூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதியான சரத் முத்தெட்டுவேகம மாத்திரம் இப்பிரகடனத்துக்கு எதிராக வாக்களித்தார்.

## வன்னி கலை, கலாச்சார பிராந்திய தமிழாராய்ச்சி மாநாடு.

வன்னிப் பிராந்தியத்தின் கலை, கலாச்சார பாரம்பரிய நிகழ்வுகளை பிரதிபலிக்கும் வகையில் மூன்று நாள் தமிழாராய்ச்சி மாநாடு சிறப்பாக நடைபெற்றுள்ளது. முதல் நாள் மாநாடு முள்ளியவளையிலும், இரண்டாவது நாள் புதுக்குடியிருப்பிலும் மூன்றாவது நாள் முல்லைத்தீவிலும் நடைபெற்றது. பல அறிஞர்களும், தமிழ் அரசியல்வாதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

## பதுளை பல்நிலைய இடமாற்றம்... ஓர் திட்டமிட்ட சதி!

பதுளை நகரமக்களின் எதிர்ப்புக்களை அலட்சியப்படுத்தி சமீபத்தில் ஐ.தே.க அரசு பதுளை பல்நிலையத்தை இடமாற்றம் செய்தது. இதற்கான உண்மைக் காரணம் என்னவென்றால் பழைய பல்நிலையத்திற்கு அருகிலுள்ள பெரும்பான்மையான தமிழ் வர்த்தகர்களின் வியாபாரத்தில் பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் [illegible] மக்களுக்கு சிரமத்தைக் கொடுக்க வேண்டும் என்பதுவே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ● தமிழீழக் கோரிக்கையை கூட்டணி தாரைவார்க்கப் போகிறதா...?

தமிழ் மக்களின் உயிரோடும், உடலோடும் கலந்த தமிழீழத்தைத் தவிர வேறெதையும் ஏற்கோம் என்று மக்களிடம் ஆணைபெற்ற த.வி.கூட்டணி இன்று ஈழக் கோரிக்கையை தாரைவார்த்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்த மாநில சுயாட்சி முறையை அரசாங்கம் முன்வைத்தால் அதனைக் கூட்டணி ஏற்கும் என்று கூட்டணியின் உயர்மட்டங்கள் கூறியுள்ளதாக வீரகேசரி செய்தி வெளியிட்டுள்ளது.

## 'நூலக எரிப்புத் தினத்தை நினைவு கூருங்கள்' யாழ். மேயர் வேண்டுகோள்.

81ம் ஆண்டு யூன் 1ம் திகதி தமிழ் மக்களின் அறிவுச் சுரங்கமான யாழ். பொது சன நூல் நிலையம் அக்கிரமிப்புப் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டது. இந்தத் தினத்தை நினைவு கூருமாறு கோரியும், இருந்ததை மீள்விக்கும் பு உதவி செய்தவர்கட்கு நன்றி தெரிவித்தும் யாழ். விசுவநாதன் அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

## மலையகத்தில் தொற்று நோய்.

மலையகத்தின் பல பகுதிகளிலும் வயிற்றோட்டம், சின்னம்மை போன்ற உயிர்க்கொல்லி நோய்கள் பரவியுள்ளன. சுகாதார வசதியற்ற சூழ்நிலைகளில் வாழ்ந்து வருகின்ற பெருமளவு மலையக மக்கள் இந்நோய்களின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

## காந்தியத் தலைவர் மீது கடும் தாக்குதல்!

பயங்கரவாதத் தடைச்சட்டப் போர்வையின் கீழ் கொடையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காந்தி[illegible] சுந்தரம் பனாகொடையில் வைத்து நிர்வாணமாக்கப்பட்டு செருப்பு, சப்பாத்து, முழங்கால், கை முஷ்டி ஆகியவற்றால் பலமாகத் தாக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக அவரது உடலில் பல காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அத்துடன் அவரது செவிகளின் கேட்கும் சக்தி குறைவடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு ஆதாரமான மருத்துவ அறிக்கையை இவரைப் பரிசோதித்த மருத்துவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

அதே வேளையில் பனாகொடை இராணுவ முகாமில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் எல்லோரும் நிர்வாணமாக்கப்பட்டு இரவிரவாக சித்திரவதை செய்யப்படுவதாக திரு. ராசசுந்தரம் தமது சட்டத்தரணிக்கு கூறியுள்ளார். பொய்யான வாக்குமூலங்களைத் தம்மிடமிருந்து பெறுவதற்காக பொலிசார் தம்மைத் தாக்கி வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் தமிழருக்கெதிரான கொடுமை நீங்க உதவுங்கள் - இந்திராவிடம் கோரிக்கை.

இலங்கையில் தமிழருக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தால் இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுங்கள் என்று அனைத்துலகப் பண்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தியை வேண்டியுள்ளது. பிரதமரிடம் மேற்படி கழகம் கையளித்த மகஜர் ஒன்றில் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட உமாமகேஸ்வரனை விடுதலை செய்யுமாறும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான மத்திய அரசின் உதவியை தமிழக அரசு பயன்படுத்தும் விதம் குறித்து ஆராய விசாரணைக் குழு ஒன்றை பிரதமர் அமைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

அதேவேளையில் பிணை இரத்துச் செய்யப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் உமாமகேஸ்வரன் தொடர்பான வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் அவருக்கும் அவரது சகாக்களுக்கும் முதல்வகுப்பு சிறை வசதிகளை அளிக்குமாறும் பொலிசாரின் வழக்குகளை விசாரிக்கும் நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.

## பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மீது சிங்களப் பேரினவாதத்தின் தாக்குதல்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் மீது சிங்களப் பேரினவாதம் நிர்வாகத்தின் துணையுடன் காடைத்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இங்கு கல்வி பயிலும் அப்பாவித் தமிழ் மாணவர் இருவர் புலி எனப் பட்டம் சூட்டப்பட்டு சிங்கள மாணவர்களாலும், நிர்வாகத்தாலும் பொலிசாரிடம் கையளிக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்திலுள்ள தமிழ் மாணவ - மாணவியர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இவர்களைக் காப்பாற்றவோ அன்றி இவர்களுக்கு உதவி செய்யவோ பல்கலைக்கழக நிர்வாகம் முன்வரவில்லை. மாறாக தமிழ் மாணவர்களைத் தாக்கிய சிங்கள மாணவர்களுக்கு ஆதரவாகத்தான் நிர்வாகம் செயற்பட்டது. மேற்படி தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு உயிர்ப்பயம் காரணமாயும் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையாலும் பல்கலைக்கழகத் தமிழ் மாணவ - மாணவியர் அனைவரும் தமிழ்ப் பிரதேசத்துக்கு வந்துவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டணி கேட்பதையெல்லாம் அரசாங்கம் கொடுக்கிறதா...?

நாம் கேட்பதையெல்லாம் ஐ.தே.க. அரசாங்கம் தருவதாகவும் அதனால் அதற்கெதிராக தீவிரமாகப் போராட முடியாமல் இருக்கிறது எனவும் சமீபகாலமாக எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் கூறிவருவது தெரிந்ததே. ஆனால் ஐ.தே.க. அரசு தமிழ்மக்களை எப்படிப் புறக்கணித்து வருகிறது என்பதை கூட்டணி பா.உ. க.பொ. இரத்தினம் அம்பலப்படுத்துகிறார். இதோ...

**கல்வியில் துரோகம்:** சிங்கள ஆசிரியர்கள் 22,399 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் தமிழ் ஆசிரியர்கள் 1,518 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். டெடிகம தொகுதிக்கு 869 ஆசிரியர்களும் வெலிகம தொகுதிக்கு 549 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் 14 பா.உ.க்களை கொண்ட வடபகுதிக்கு 752 பேரும் 12 பா.உ.க்களை கொண்ட கிழக்குப்பகுதிக்கு 1230 ஆசிரியர்களும் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

**வேலைவாய்ப்பிலும் துரோகம்:** புகையிரதப் பாதுகாவலர்களாக 83 பேர் நியமிக்கப்பட்டனர். இதில் ஒருவர் மட்டும் தமிழர். புகையிரத இலிகிதர் நியமனம் 214 இதில் தமிழர் மூவர். புகையிரத நிலைய அதிபர் நியமனம் 201 இதில் 8 பேர் தமிழர். நில அளவையாளர்களாக 44 பேரும் நிர்வாக சேவைக்கு 71 பேரும் உதவிப் பொலிஸ் அதிபர்களாக 15 பேரும் நியமிக்கப்பட்டனர். இதில் எவருமே தமிழரில்லை. வெளிநாட்டுக்கு அரசாங்கம் வருடத்திற்கு 16,000 பேரை அனுப்புகிறது இதில் 60 பேர் கூட தமிழரில்லை.

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா கூட்டணி கேட்பதும் ஐ.தே.க. அரசு கொடுப்பதும்.

* எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் துண்டுப்பிரசுரம் ஒன்று தொடர்பாக கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
* பட்டிருப்பு பா.உ.வின் இலிகிதரான நாகேந்திரராஜா கைது செய்யப்பட்டுள்ளார்.
* குருநகர் இராணுவ முகாமின் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் முகாமிற்கு அருகிலுள்ள வீதிகள் மூடப்பட்டு அப்பகுதியால் மக்கள் போவது தடை செய்யப்பட்டுள்ளது.
* மட்டக்களப்பு நெல் சந்தைப்படுத்தும் திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.
* உள்ளூராட்சித் தேர்தல்களை தொடர்ந்து ஐ.தே.க விற்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் பிளவுகள் வலுத்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிப் புயல் வீசிய பூமியிலே ஒரு பழுதிப் புயல்! * * * * * * * *



ஏகாதிபத்தியத்துக்கு நாம் என்றுமே எதிரானவர்கள் என போர் தொடுக்கும் சான்டினிஸ்த்திய புரட்சியாளர்கள்.

நிக்கரகுவா...! ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏகாதிபத்திய இருளைக் கிழித்து புரட்சிச்சூரியனை பிரசவித்த நாடு. சர்வாதிகாரி சமோசாவிற்கு எதிராகப் போர்தொடுத்த சான்டினிஸ்த்தியப் புரட்சியாளர்க்கு வெறுமனே இந்த வெற்றி கிடைக்கவில்லை. இதற்காக இம்மண்ணிலே ஏற்பட்ட உயிர்ப்பலிகளோ ஏறத்தாழ 50,000. இழப்புக்களிலும்... இடைவிடாத போராட்டத்திலும் கிடைத்த இந்த வெற்றி இலத்தீன் அமெரிக்கா எங்கும் புரட்சி விதைகளைத் தூவத் தொடங்கியது. சான்டினிஸ்த்தியரின் வழியில் சல்வடோரின் இடதுசாரிக் கெரில்லாக்களுக்கும் வெற்றியை ஈயத் தொடங்கின. இலத்தீன் அமெரிக்காவின் ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிக் கதிரவனின் கதிர்கள் படரத் தொடங்கின.

இது அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குப் பிடிக்கவில்லை. இலத்தீன் அமெரிக்காவில் தான் மேற்கொண்டுவரும் சுரண்டல் நடவடிக்கைகள் முடிவடையப் போகிறதே என எண்ணிய அமெரிக்காவுக்கு அதைவிடப் பெரிய பயம் ஒன்று ஏற்பட்டது. அது தான்... இன்று இலத்தீன் அமெரிக்காவில் படரத்தொடங்கியிருக்கும் புரட்சிச் சூரியனின் கதிர்கள் நாளை அமெரிக்காவிலும் படரத் தொடங்கிவிட்டால்... அடக்குமுறைக்குள்ளாகி வரும் கறுப்பு இனமக்களும், அடக்கப்பட்டு வரும் தொழிலாளர்களும் இணைந்து புரட்சிக் குண்டுகளை வெடிக்கச் செய்து முதலாளித்துவத்தை தகர்த்து விடுமே என்ற அச்சம் அமெரிக்காவை அதன் வழமையான நாசவேலையில் ஈடுபடுத்தியது. அமெரிக்க அரசு தன்னுடைய சதிக் கருவியான சி.ஐ.ஏ.யை தட்டிவிட்டது.

ஏற்கனவே பல நாடுகளின் அமைதி சி.ஐ.ஏ.யினல் குலைக்கப்பட்டதும் பல தலைவர்கள் சி.ஐ.ஏ.யினல் கொல்லப்பட்டதும் நாம் அறிந்ததே. இந்த வரிசையில் புரட்சிப்பாதை சமைத்து, முதலாளித்துவத்தை ஒழித்து பொதுவுடைமை ஆட்சிமுறையின் கீழ் மக்களை சரியான வாழ்க்கைக்கு அழைத்துச் சென்ற சான்டினிஸ்த்தியப் புரட்சி அரசை [illegible] சதியை சி.ஐ.ஏ. ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிக்கரகுவாவின் முன்னாள் சர்வாதிகாரி சமோசாவின் அடியாட்கள் சிலரை விலைக்கு வாங்கி நிக்கரகுவாவிற்கு அருகிலுள்ள சிறு நாடாகிய ஹொண்டுராசில் பயிற்சி முகாம்களை அமைத்து அவர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் அளித்து புரட்சிப்படைகட்கு எதிராக கிளர்ச்சி செய்யச் செய்துவருகிறது. சாண்டினித்தியப் புரட்சி அரசை கவிழ்க்க அமெரிக்க அரசு மில்லியன் கணக்கான டொலர்களை ஒதுக்கிடு வருகிறது. அமெரிக்க அரசின் இச்செயல் அம்பலத்துக்கு வந்ததும் அமெரிக்க மக்களும், அரசியலாளர்களும் பெரும் கொதிப்புற்றுள்ளனர். அமெரிக்க அரசியல் சட்டத்துக்கு விரோதமாக அரசு இன்னொரு நாட்டின் தனியுரிமையில் தலையிடுவது மாத்திரமல்லாது மக்களின் அங்கீகாரம் பெற்ற அரசைக் கவிழ்க்க முயல்வதும் பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. அமெரிக்காவில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து சூப்புக் கொட்டகைகளில் வரிசைகளாக பட்டினியுடன் நின்று பசிக்கத்தால் தவிக்கையிலே மில்லியன் கணக்கான டொலர்களை மக்கள் பிரதிநிதிகளின் அங்கீகாரம் பெறாமல் சதிச்செயலுக்குப் பயன்படுத்தும் இச்செயல் மக்களிடையே பெரும் கொதிப்பை மூட்டியுள்ளது.

அமெரிக்க அரசின் இச்சதியால் இன்று நிக்கரகுவாவின் சாதாரண மக்களது அமைதியான வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்களை குறைத்து அரசு பாதுகாப்பில் அதிக செலவிடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. புரட்சியாளர்கட்கு சில இழப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றது. மக்களுடைய சொத்துக்கள் அமெரிக்க கைக்கூலிகளால் சூறையாடப்பட்டுள்ளன. இருப்பினும் சாண்டினித்தியர்கள் சி.ஐ.ஏ.யின் இச்சதியை வெற்றிகரமாக முறியடித்து வருகின்றனர்.



சி.ஐ.ஏ.யின் சதிக்குப் பலியாகிய சாண்டினித்தியப் புரட்சியாளன் ஜோவின் இறுதி ஊர்வலம்.

இத்தனை நாட்களாக இரகசியமாகச் செய்து இப்போது பகிரங்கமாகவே அமெரிக்கா செய்யும் இவ்வக்கிரமத்தை ஐ.நா. சபையோ அன்றி ஜனநாயகத்தைப் பற்றி வாய்கிழியப் பேசும் எந்த நாடுகளுமோ இதுவரை கண்டிக்காவிட்டாலும் சர்வதேச தொழிலாளர்களும், சமவுடமை நாடுகளும் நீதியை வேண்டு நெறியான வாழ்க்கை வாழும் மக்களும் வன்மையாக கண்டிக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் உடனடித் தேவை * * *
# * * * தமிழீழப் பாதுகாப்புப் படை.

- ராஜாஜி-

யாழ்நகர் -

தமிழீழப் பெருநகர் - தார்மீகப்படைகளால் 'இடுகாடாய்' மாற்றப்பட்டு மற்றுமொருமுறை இருக்கப்பட்ட 'மணவீடா'க குலைந்து கிடக்கிறது. சிதைவதும் மீண்டும் எழுவதும் - எரிந்து அழிவதும் யாழ் நகரின் தலைவிதியாகிவிட்டது.

விடுதலை அடையப்போகும் சுதந்திர நாட்டு நகரின் ஆரம்ப கட்டமே அதுதான்.

நொருக்கப்பட்ட இல்லங்கள் மீண்டு எழுவதற்கு முன்னர் - எரிக்கப்பட்ட நிலையங்களின் புகைமண்டலம் வானில் கலக்க முன் - மற்றுமோர் தீ வைக்கப்பட்டாகிவிட்டது.

தமிழீழத்தில் தேர்தல் பகிஷ்கரிப்பிற்கும் - அதை மீறி வாக்களிக்கோரிய அரசிற்குமிடையிலான 'பலப்பரீட்சை'யில் தேர்தல் பகிஷ்கரிப்பு வெற்றியீட்டியுள்ளது.

கந்தர் மடத்தில் தார்மீகப்படைகள் மீது வெடித்த வேட்டுகளுக்குப் பதில் சொல்லமுடியாத அரசபடைகள் அப்பாவிகளின் சிதைகளை கொளுத்தியுள்ளன.

சாதாரண பிரமுகர்களின் வீடுகளை தரைமட்டமாக்கி - சொந்த நிலத்திலேயே அகதிகளாக்கி எக்காளமிட்டுள்ளன.

1972 இலிருந்து ஆங்காங்கே "மின்னி"வந்த அரசஎதிர்ப்புப் போராட்டங்களின் "பெருமழை" பொழிவதற்கான "இடி முழக்கங்"களின் வெளிப்பாடாக நடந்து முடிந்த சம்பவங்கள் "எதிரொலி"க்கின்றன.

தமிழன் தன்னைத்தானாள வேண்டுமென்ற கோஷங்கள் 77 வரை அரசியல் "பூசகர்"களால் ஓயாமல் ஒலிக்கப்பட்டு பின்னர் பாராளுமன்ற கதிரைகளுக்கான "மந்திரங்கள்" என்று உணரப்பட்ட பின்னரும் தமிழினம் சிந்திக்கத் தலைப்படாதது கவலைக்குரிய விடயம்.

தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்கான தமிழ் மக்களின் பரிசுத்த ஆணை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட நிலையிலும் - தமிழீழ விடுதலை முன்னெடுத்துச் செல்லப்படாத நிலையிலும் தமிழினம் விழித்துக் கொள்ளாதது வேதனைக்குரியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஏகாதிபத்திய முகவர்களும் - இனவாத சி
லங்கா அரசும் - தமிழீழ பெரும் முதலாளித்துவ தலை
பேரம் பேசி மக்கள் மத்தியில் வேரூன்றிய விடுதலை
உணர்வை முறியடிக்க நாலு படைகளை தமிழீழத்தில்
நிலை கொள்ளச் செய்த போதும் கூட - தமிழினம் கையற்
றுத் தவறியதும் -

1981ல் யாழ். மாநகரத்தில் சிறிலங்கா இனவாத அரசினா
ரால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட அபிவிருத்திச்
சபைத் தேர்தலில் அவசியமின்றி தமிழினம் பங்கெடுக்க
முற்பட்டதும் -

சில விபரீத விளைவுகட்கு முன்னோடியாகும்.

சிறீலங்காவின் அதிஉத்தம ஜனாதிபதியின் மந்திரி, சேனாதி
களின் முன்னிலையில் யாழ். நகரம் தீயிடப்பட்டதும் - எ
இனத்தின் அறிவுச் சுரங்கம் சாம்பராக்கப்பட்டதும் -

மக்கள் பிரதிநிதியின் வீடும் வாகனமும் நிர்மூலமாக்கப்ப
ட்டதும் உயிரைக் காப்பாற்ற அவர் சுவரேறிக் குதித்
சம்பவங்களும் தமிழினத்தின் பாதுகாப்புக்கு ஓர் கே
விக் குறியாகும். தமிழினத்தின் ஏகபோக பிரதிநிதிக
ளாக... தமிழினத்தின் தலைமையை ஏற்றுள்ளதாக மா
தட்டும் கட்சியின் மக்கள் பிரதிநிதிக்குப் பாதுகாப்ப
ற்ற நிலையிலும் -

அதன் தலைவரின் அலுவலகத்தில் தூங்கிக் கொண்டிருந்த
இளைஞன் பாலஜோதி சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்
தும் -

தமிழீழத் தலைவர்கள் கவலைப்படாதிருப்பினும் தமது
பாதுகாப்புப் பற்றி சிந்திப்பதற்கு தமிழினத்திற்கு அவசி
தேவை ஏற்பட்டிருக்கிறது.

இன்பம் - செல்வம் - இந்திரராஜா ... என்று ஆரம்பித்த
அதியாயப் படுகொலைகளின் பட்டியல்கள் சின்னத்தம்பி
கனகவேல் சிங்கம் என்று நீண்டு இன்று நவரத்தின
ராஜா, சிறீஸ்கந்தராஜா என்று தொடர்கிறது.

இரவோடு இரவாக இரகசியமாக இளைஞர்களை இழு
த்துச் சென்று கொலை செய்த தாக்கப் படைகள் இன்று
பட்டப்பகலிலேயே வீதியில் சுட்டுக் கொல்கின்ற
துணிவைப் பெற்றுள்ளன.

காணமல் போன இளைஞர்கள் காவலிலா அன்றி கொ
ன்டனா எனத் தெரிந்து கொள்ள முடியாத நிலை. வி
டுதலைக்கு எருத்துச் [illegible] பலிக்கடாக்கள் என்
றதற்கு மரணம் சான்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணுவப்படைகளின் இலக்கு அப்பாவித் தமிழ்மக்கள் மட்டுமல்ல - தமிழினத்தின் அறிவியல் நிபுணர்கள் - எழுத்தாளர்கள் - பல்கலைக்கழக மாணவர்கள் - பட்டதாரிகள் என்ற நிலையை அண்மித்து விட்டது.

அடக்குமுறை அரசின் துப்பாக்கிக் குண்டுகள் சந்தேக நபர்களை மட்டுமல்ல - சாதாரண வயோதிபர்களின் வலுவிழந்த உடல்களைக் கூடத் துளைக்க ஆரம்பித்து விட்டன.

தமிழினத் தலைமை வெறும் "வெற்றுப் பொம்மை"தான் என்ற உண்மையை காவலில் வாடும் மதகுருக்கள் மீதும், அறிஞர்கள் மீதுமான சித்திரவதைகள் நிரூபிக்கின்றன.

நல்லிக்காவலர்கள் எனப்பட்டம் சூட்டி - இன்று எல்லை வழியே எதிரியிடம் சரணடைந்த தலைவர்களைத் தலை வணங்க வைத்து -

காந்தீயத்தின் கீழ் சிறீலங்கா மண்ணில் அகதிகளாக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களுக்கு மறுவாழ்வளித்-தல்லும் பகுதிகளை குடியேற்றங்களை அமைத்து எமது மண்ணைப் பாதுகாத்து புனிதபணிகள் புரிந்து வந்த டாக்டர் இராஜசுந்தரம், டேவிட் ஆகியோருக்கும் கிடைத்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பூட்டுக்கள்! காந்தீயத் தலைவர்கட்கும் தொண்டர்கட்கும் சென்றாந்தர அறைகளும் - கொடும் சித்திரவதைகளும்.... நாளை தமிழ்மக்களுக்கு ஏற்பட இருக்கும் பெரும் இடப்பாடுகளின் அபசகுனம்.

கடந்த ஆறு ஆண்டுகளாக விடுதலைப் போராட்ட வர்க்கத்தை தலைவர்கள் "மந்தப்"படுத்தியதற்கு மாறாக ராணுவப்படைகள் "அதிகரித்து" வைத்திருக்கின்றன.

தமிழீழமெங்கும் போராட்ட "அறிகுறிகள்" தென்படுகிறதை மாணவ - மாணவியரின் போர்க்கொடிகள் காட்டுகின்றன.

காலம் காலமாக தமிழன் நிலமும் வாழ்வும் தமிழனால் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்து இன்று அரசபடைகளின் அட்டகாசத்தால் உடனடியாகச் செயற்படுத்த வேண்டிய தொன்றாகிவிட்டது.

தனிப்பாதுகாப்பு என்பது இன்று தமிழினத்தால் அவசரமாக ஏற்படுத்த வேண்டிய தேவையாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையெல்லாவற்றையும் விட தமிழினத்தின் தமிழீழ அங்கீகாரத்தைப் பெற்று இன்று அரசியல் அங்கத்களாக - ஆக்கிரமிப்பு அரசின் அடிவருடிகளாக - இனத்தின் கோடரிக் காம்புகளாக மாறி தமிழினத்தின் பாதுகாப்பையும் அமைதியையும் மறந்து - சிறிலங்கா அரசோடு உறவு கொண்டுவிட்ட போலித்தலைமை திரை திருப்பப்பட வேண்டும் - அன்றி பறிக்கப்பட வேண்டும்

• தமிழீழக் கோரிக்கையை வென்றெடுக்காததற்கு மாத்திரம் அன்றி - ஜனநாயக ரீதியாக - தமிழினம் 1977 ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் அளித்த பிரதிநிதித்துவத்தை அரசியல் ரீதியாக நிரூப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை எம்மக்கள் எதிர்த்த காரணத்தாலும் தொடர்ந்து சிறிலங்கா பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்க அருகதையற்றவர்கள்.

தேர்தல்களில் கலந்துகொள்ளும் தமிழ்மக்களின் வீத தொடர்ந்து குறைந்து செல்வதும் அண்மை உள்ளூராட்சித் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 80% மான மக்கள் தேர்தல்களைப் பகிஷ்கரித்ததும் வரவேற்கத்தக்க முன்னெடுப்பாகும். இதைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

தமிழீழத்தில் ஏற்படுத்தப்பட்ட - படப்போகின்ற அக்கிரமங்களுக்கும் - அநியாயங்களுக்கும் தமிழீழத் தலைமை பொறுத்தர இருக்கின்ற விசாரணைக்குழுக்கள் வெறும் துணைப்பே என்பதை தமிழினம் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழினத் தலைமையை தமிழ்மக்கள் ஏற்று தமிழீழப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட வேண்டும்.

சிறிலங்கா ஏகாதிபத்தியப் படைகளின் வெறியாட்டத்தினை அடக்கி விரட்டுவதற்கான தமிழீழப் பாதுகாப்புப் படையை விரைந்து அமைப்பதுடன் - தமிழினத்தின் மீதான அநியாயத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் போர்முனை எதிர்விளைவுகளுக்கு தமிழினமும், தமிழ்நிலமும் தயாராக வேண்டும்.


தமிழ் மக்கள் பங்குபற்றும் அடுத்த தேர்தல் ஈழத்தின் தேர்தலாக இருக்கட்டும்.

அதுவரை தமிழினம் தனது சுயபாதுகாப்பையும் - ஆட்சியையும் நிலைப்படுத்தும் அவசியத்தை - செயற்படுத்தும் நடவடிக்கைகளைத்தான் அண்மைக்காலச் சம்பவங்கள் கட்டாயமாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

# சிறீலங்கா இராணுவத்தின் 18ம் திகதிய வெறியாட்டத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள்...



நாளை பொழுதை எண்ணி ஏங்குகின்ற ஏழைத் தமிழ்க் குடும்பமொன்றின் எரியுண்ட குடிசை...

* கந்தர்மடப் பகுதியில் ஆயுதப் படையினரின் தீவைப்பு, கொள்ளையடிப்புக்களால் ஏற்பட்ட மொத்த இழப்பு பொலிசாரின் அறிக்கைப்படி ஏழரைக் கோடி ரூபா.

* காரைநகர் கடற்கரையில் குளித்துவிட்டுத் திரும்பிய அப்பாவி இளைஞன் சிறீஸ்கந்தராஜா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

* பெண்களின் தாலி, சங்கிலி உட்பட வீடுகளிலுள்ள விலையுயர்ந்த பொருட்கள் யாவும் இராணுவத்தால் சூறையாடப்பட்டது.

* அன்றாட ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தும் 150 ஏழைத் தமிழ்க் குடும்பங்களின் குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் அனைத்தையும் இழந்து அகதிகளாகியுள்ளனர்.

* 30க்கும் மேற்பட்ட கல்வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிக்கப்பட்டன.. அடித்து நொருக்கப்பட்டன. யாழ். மரக்கறிச் சந்தை தீக்கிரையாக்கப்பட்டது. 3 பெற்றோல் நிலையங்கள், யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க முகப்பு, வர்த்தக வங்கி முற்புறம் ஆகியன போன்ற பல இடங்களும் சேதப்படுத்தப்பட்டன.

* வீதிகளில், வீடுகளில் வைத்து பொதுமக்கள், பல்கலைக் கழக மாணவர்கள் பலர் இராணுவத்தால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனால் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ். மருத்துவமனை ஊழியர்களாகிய பிரபாகரன், முத்துலிங்கம் ஆகிய இளைஞர்கள் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர். பல்கலைக் கழக மாணவர்கள் பலர் தமது புத்தகங்கள், குறிப்புக்களை இழந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நகர் இராணுவ வெறியாட்டம் ஒரு திட்டமிட்ட செயலா?

மே, 18ம் திகதி கந்தர்மடத்திலும் யாழ் நகரின் சில பகுதிகளிலும் நடைபெற்ற இராணுவ வெறியாட்டம் இளைஞர்களின் தாக்குதலால் ஏற்பட்ட ஆத்திரமூட்டலின் விளைவு என்று சொல்லப்படுகின்ற போதும் உண்மையில் இது ஏற்கனவே திட்டமிடப்பட்டதாகக் கருதப்படுகிறது. காரணம் சம்பவ தினத்திற்கு முதல் தினமான 17.05.83 இல் பிரசுரமான வீரகேசரியில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்தகையுடன் வட பகுதியில் நிலவும் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்படும் எனத் தெரிய வருகிறது. கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்படலாம்.....

என செய்தி வெளியாகியுள்ளது. திட்டமிட்டபடி அரசாங்கம் 18ம் திகதி எடுத்த நடவடிக்கைகளை பார்த்தீர்களா....?

அதுமாத்திரமல்ல சம்பவதினத்துக்கு அடுத்த தினமான 19.05.83 அதிகாலை வெளியான 'சன்' ஆங்கில தினசரியில் யாழ். இராணுவ வெறியாட்டத்தில் வீரசிங்கம் மண்டபம், யாழ். கூ. மொ. ப. நோ. ச. தலைமையகம் ஆகியனவும் நாசப்படுத்தப்பட்டதாக வெளிவந்துள்ளது. ஆனால் உண்மையில் மேற்குறிக்கப்பட்ட கட்டடங்களை இராணுவம் தாக்க முயன்றது உண்மை. ஆனால் இளைஞர்கள் சுட்ட எதிர் வேட்டுக்கள் இராணுவத்தை ஓடச் செய்துவிட்டன. அதனால் இந்த கட்டடங்களுக்கு சேதம் ஏற்படவில்லை. ஆனால் சேதம் ஏற்பட்டதாக 'சன்' செய்தி வெளியிட்டது எப்படி...? போட்ட திட்டம் தவறிவிட்டதா...?

சமீபத்தில் அரசாங்கம் மூன்று அமைச்சர்களை தமிழர் பிரச்சினைகட்குத் தீர்வு காண நியமித்தது. அவர்கள் யார் தெரியுமா.... சிறில் மத்தியூ, காமினி திசநாயக்கா, (இவ்விருவரின் தலைமையில்தான் 1981ம் ஆண்டு யூன் வெறியாட்டம் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது), தேவநாயகம் (ஒரு வருடத்துக்கு முன்பே காந்தியத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று கூறியவர்), ஆகியோர் கண்ட திட்டமிட்ட தீர்வே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிந்திய செய்திகள்:

## வல்வை வாலிபர் பழனிவேல் இராணுவத்தால் கோரக் கொலை!

வல்வெட்டித் துறையைச் சேர்ந்த பட்டு எனப்படும் பழனிவேல் என்ற 28 வயது இளைஞர் வல்வெட்டித்துறை இராணுவ முகாமுக்கு இராணுவத்தினரால் இழுத்துச் செல்லப்பட்டு கோரமாகக் கொலை செய்யப்பட்டார். இவருடைய உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்திருந்தன. தலை வாகனமொன்றினால் நெரிக்கப்பட்டு, சிதறிக் கிடந்தது. மூளை வெளியேறியிருந்தது. பொலிஸாரின் அறிக்கைப்படி இராணுவ வண்டிச் சக்கரத்தினால் இவரது தலை நெரிக்கப்பட்டிருக்கலாம் எனப்படுகிறது. இவரது இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். சம்பவத்தினை அடுத்து, வல்வெட்டித்துறை இராணுவ முகாம் வாசலில் நூற்றுக்கணக்கான மக்கள் முற்றுகையிட்டு தம் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## வவுனியாவில் இரு விமானப்படை வீரர்கள் கொலை! இரு இளைஞர்கள் கைது!

வடபகுதி தீவிரவாத இளைஞர்கள் நால்வரின் திடீர் ஆயுதத் தாக்குதலுக்கு இலக்கான விமானப்படை வீரர் இருவர் 2.06.83 இல் வவுனியா சந்தையடியில் பலியானார்கள். இன்னுமொரு வீரர் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளார். இந்த தாக்குதலை நடத்தியதாகக் கருதப்படும் இரு இளைஞர்களான இராமநாதன், குமார் ஆகியோர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடும் காயத்துக்குள்ளாகியுள்ளனர். இவ்விரு இளைஞர்களும் கோவில் குளம் எனும் பகுதியிலுள்ள குகையொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தையடுத்து வவுனியா நகரிலும் இராணுவத்தினர் வெறியாட்டம் நடத்தியுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

## தங்கத்துரை மீது மேலுமோர் வழக்கு!

தற்போது ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் தங்கத்துரைக்கெதிராக முன்னாள் நல்லூர் பா.உ. அருளம்பலத்தை கொலை செய்ய முயன்றதாக வழக்கு சிறிலங்கா அரசால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMOUL MOURASSOU

MOURASSU-1 * JUIN -1983 * OLY-8

## LA DESTRUCTION DE LA VILLE DE 'KANDARMADAM'

Le mercredi 18 mai, la ville de Kandarmadam (une ville dans le district de Jaffna) avait été incendie par l'armée. 180 maisons et plusieurs voitures avaient été entièrement brûlées.

Rappelons qu'au Ceylon (Srilanka) la communité tamoule, habitant le Nord et l'Est de l'île demande son indépendance et lutte pour un état séparé. Elle éprouve une discrimination sur tous les niveaux de la vie, dans l' éducation, l'emploi, la distribution de terre, le développement des régions de tamoule.

Les événement éclataient à l'occasion d'élection législatives partielles. Les jeunes tamoules ont demandé les tamoules de boycotter l'élection.

En entendant l'incident d'incendie, le maire de ville de Jaffna avait donné l'ordre aux employés municipal et aux pompiers pour éteindre le feu. Mais, ils ont été empêchés par l'armée de le faire.

A cause de cette destruction les tamoules ont perdu environ 7.5 million rupees ( 30 million francs).

Après cette destruction plus d'une centaine d'habitants de la ville de Kandarmadam se sont réfugiés à l'université de Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## L'ETAT D'URGENCE EST PROCLAME

L'état d'urgence a été mis en place, le mercredi 18 mai à Ceylon (Srilanka) où des incidents lors d'élection législatives partielles ont fait plusieurs morts et blessés.

Les jeunes militants de la nation tamoule ont ouvert le feu sur les forces de sécurité, stationées devant un bureau de vote du district de Jaffna, dans le nord du pays.

Au nord de Colombo aussi, une persônne a été tuée à Mahara à la suite d'incidents entre groupe politique le parti national unifié (P.N.U)-formation du président Jeyawardena et le parti de la liberté de Srilanka (P.L.S.L) de l'ancien premier ministre - Madame Bandaranayake.

## MANIFESTATION CONTRE LE GOUVERNEMENT DU SRILANKA

Environ mille tamouls ont manifesté le 30 mai 1983 près de l'ambassade de Srilanka contre le terrorisme de l'état sur les tamoules à Tamil Eelam. Cette manifestation tenait à dénoncer publiquement la terrible répression qui s'abat à Srilanka sur le peuple tamoules sous le régime de J.R.Jeyawardena. Mr. KRISHNA VAIKUNTHAVASAN, le Conveneur de Commité de Co-Ordination de tamil, London et membre de Coseil de Libération de Tamoule Eelam a participé à cette manifestation. Quand il a pris la parole à la fin de la manifestation, il a notamment dénoncé le terrorisme contre les tamoules par le gouvernement du Srilanka.

## LEADER DE L'OPPOSITION DEMANDE DE RETIRER L' L'ARMEE DU NORD ET DE L'EST

Le Secrétaire Général de T.U.L.F. et le leader de l'opposition du Srilanka Mr.Amirthalingam a demandé au gouvernement du Srilanka de retirer

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

l'armée du nord et de l'est. C'est la première fois qu'il l'a demandé au gouvernement.

## 90% DES TAMOULES ONT BOYCOTTE L'ELECTION DANS LE NORD

90% de tamoules dans la région de Jaffna ont boycotté l'élection legislatives. A la fois plusieurs candidats de la partie national unifié et de la partie de l'opposition - T.U.L.F. ont retiré ses candidatures.

Les jeunes tamoules ont demandé les candidats de retirer et le publique pour boycotter l' élection.

Les résultat de district du nord:

| LIEU | % BOYCOTT | VOTE TOTAL | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| JAFFNA | 86% | 66,921 | 8594 | 830 | 272 | – | – |
| CHAVACACHCHERI | 85% | 12059 | 1718 | 38 | 109 | – | – |
| VALVETTITHURAI | 93% | 8541 | 173 | 4 | 07 | – | – |
| POINT-PEDRO | 99% | 10921 | 82 | 27 | – | 5 | 1 |

1- TULF - Tamil United Liberation Front

2- United National Party

3- ACTC:- All Ceylon Tamil Congress

4- NSSP:- Nava Sama Samaja Party

5.- INDIPENDANT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JEUNE TAMOULE A ETE TUE DANS CAMP DE L'ARMEE

Le 30 mai 1983, le matin vers 04.30, un innocent tamoule, Monsieur Sabaratnam Palanivel, 28 ans a été brutalement tué dans un camp de l'armée à Valvettithurai, dans le nord du pays.

Il a emmené ses parants à la station de 14autobus de long voyage. En retournant il a été arrêté par l'armée devant le camp, tirait dans le camp. Il avait été tué et après l'armée avait fait rouler un camion de militaire sur sa tête.

## PROTESTATION EN ALLEMAGNE

Des groupes d'exiles tamoules en Allemagne ont organisé une manifestation à Bonn le 22 mai 1983 pour protester contre la loi sur la prévention du terrorisme à Srilanka. Ils ont réclamé la liberté pour de jeunes activiter Tamoules accusés de terrorisme et soumis à la torture. Ils ont également demandé l'asile politique pour les tamoules et la cessation des départations. Leurs pancartes revendiquaient, entre autres: "

"Tamil Eelam is inevitable"

"Release all imprisoned tamils"

"Stop terrorism against tamils"

"Jayawardena/Premadasa you have blood in your hands"

Plus d'un million de tamoules ont participé à cette manifestation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் வீறு கொண்டெழுகிறது! தமிழீழ விடுதலைப் போராட்டம்!

## * பிரான்சில்.... ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

சமீபத்தில் யாழ். நகரில் நடந்த இராணுவ வெறியாட்டங்களையும் தொடர்ந்து தமிழ்மக்களுக்கு சிறீலங்கா அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட அநீதிகளையும் கண்டித்து பிரான்சு வாழ் தமிழ் மக்கள் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தினர். 30.05.83 இல் நடந்த இந்த எதிர்ப்பு ஊர்வலம் பாரிசிலுள்ள சிறீலங்கா தூதரகத்துக் கண்மையில் முடிவடைந்தது. தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)யும் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டது. இவ்வூர்வலத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் பிரான்சு கிளையினரால் ஈழப் பிரச்சினையை விளக்கும் பிரெஞ்சு - தமிழ் மொழி பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

## பேரவை நிதி சேர்ப்பு...

18ம் திகதி இராணுவ வெறியாட்டத்தில் பாதிக்கப்பட்டு தமது குடிசைகளையும் உடமைகளையும் இழந்த ஏழைத் தமிழ்மக்களுக்கு மறுவாழ்வளிக்கும் பணிக்காக நிதிசேர்த்து அளிக்கும் பணியில் தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) ஈடுபட்டுள்ளது.

## ஜேர்மனியில்... எதிர்ப்பு ஊர்வலங்கள்

ஜேர்மனியின் நகரங்களான பொன், பேர்லின் ஆகியவற்றில் தமிழீழ விடுதலைப் போராளிகளால் சிறீலங்கா அரசின் கொடுமைகளை அம்பலப் படுத்துமுகமாகவும் தமிழீழப் பிரச்சாரங்களை வலுப்படுத்துமுகமாகவும் பெரும் எதிர்ப்பு ஊர்வலங்களை மேற்கொண்டுள்ளனர்.

---

மாரடைப்பு காரணமாக 25.05.83 புதன் காலை திடீர் மரணமடைந்த இளைஞர் குமாரசாமி - சந்திரகுமாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும் நண்பர்களுக்கும் எமது வருத்தத்தை தெரிவிக்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூலம் பிரெஞ்சு

(பாகம் - 14 - தொடர்ச்சி)

சென்ற இதழ்களில் பிரெஞ்சு அரிச்சுவடி உச்சரிப்பையும் சில அன்றாட உபயோக சொற்களையும் பிரெஞ்சு கற்கும் மாணவர்களின் பிரச்சனைக்குரிய விடயங்களையும் கவனித்திருந்தோம். அத்துடன்

Adjectifs Démonstratifs

Pronoms Démonstratifs

Adjectifs Possesifs

என்பவற்றையும் பார்த்திருந்தோம்.

சாதாரணமாக வசனங்களில் (Possesifs) எனது, எனக்குரியது என்பவை பிரெஞ்சு மொழியில் எவ்வாறு கையாளப்படுவது என்பதை கீழ்க் காணும் வசனங்களில் பார்ப்போம்.

Cettemontre est moi.... இந்த மணிக்கூடு என்னுடையது.

C'est ma montre .... இது என் மணிக்கூடு

இந்த இரு வசனங்களிலும் உள்ள வேறுபாடு களை நன்கு கவனிக்கவும். இரு வசனங்களும் ஒரே கருத்தைத்தான் வலியுறுத்துகின்றன. இவ்வாறே மற்றவைகளும்....

moi - mon

toi - ton

lui - son

nous - notre

இதுவரை 14 பாகங்கள் மூலமாக பிரெஞ்சு மொழியை கற்க வசதி செய்திருந்தோம். இத்துடன் பிரெஞ்சு கற்கையின் ஆரம்பப்பகுதி முடிவுறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கிரமங்களுக்கு எதிராக அணிதிரள்வதில் தாமதம் இன்னும் ஏன் தமிழ் இனமே...!

கிறைகோ மிரெமிக் – 19 வயது நிரம்பிய போலந்து கல்லூரி இறுதியாண்டு மாணவன். கல்லூரி இறுதிப் பரீட்சைகளை முடித்த உற்சாகத்துடன் அந்த தினத்தை தனது நண்பர்களுடன் சேர்ந்து கொண்டாடச் சென்ற இளைஞன் வழியில் போலந்து பொலிசாரால் மறிக்கப்பட்டு எக்காரணமுமின்றி கோரமாகத் தாக்கப்பட்டான். இந்த அரக்கத்தனமான தாக்குதல் அந்த அப்பாவி இளைஞனை இரண்டு நாட்களில் இறப்பைத் தழுவச் செய்தது.



போலந்து பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதலுக்குப் பலியான இளைஞனின் இறுதி ஊர்வலத்தில் கலந்த மக்கள் கூட்டம்

இந்த அக்கிரமம் கண்டு போலந்தின் மக்கள் அமைதியான முறையில் தமது பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். சுதந்திர தொழிற்சங்கமான சொலிடாரிற்றியை போலந்தின் இராணுவ அரசு தடைசெய்து மக்களை வீதியிலே கூடுவதற்குக் கூட கடும் கட்டுப்பாடுகளை விதித்து இராணுவ தர்பார் நடக்கும் இன்றைய நிலையில் கூட பொலிசாரின் இந்த அக்கிரமங்கண்டு ஒன்றல்ல இரண்டல்ல; நூறல்ல... ஆயிரமல்ல ஏறத்தாழ 10,000 மக்கள் அரச பயங்கரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில்... அப்பாவி இளைஞனின் கொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இவ்விளைஞனின் மரணச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டனர். தடைசெய்யப்பட்ட சொலிடாரிற்றி தொழிற்சங்கத் தலைவர் வலேசாவ் உருக்கமான முறையில் தனது அஞ்சலியை அனுப்பி வைத்திருந்தார். அதுமாத்திரமல்ல தடை செய்வதன் மூலம் ஒரு இயக்கத்தையோ அல்லது மக்களின் எழுச்சியையோ அடக்க முடியாது என்பதை சொலிடாரிற்றி இயக்கம் அடக்குமுறை இராணுவ அரசுக்கும், உலகுக்கும் எடுத்துக் காட்டியது. தடுமாற்றம் எதுவுமின்றி, கொண்ட கொள்கையிலே உறுதியாக மக்களின் மனவிருப்புக்களுக்கு மதிப்பளித்து.... அவர்களின் உணர்ச்சிகளை மழுங்கடிக்கச் செய்யாது கூர்மையாக்கி எடுத்துச் செல்லும் இயக்கமானது தனக்கும் தன் மக்களுக்கும் எதிரான தடைகள் யாவற்றையும் உடைத்தெறியும் என்பது போலந்தில் மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதே வேளையில் ஈழத்தில் நடந்தது என்ன? திருநெல்வேலியை சேர்ந்த தமிழ் இளைஞன் நவரத்தினராசா எக் காரணமுமின்றி சிறிலங்கா இராணுவத்தால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குருநகர் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டான். அங்கே 4 நாட்கள் கடும் சித்திரவதை ... கடைசியில் மிஞ்சியது அந்த அப்பாவி தமிழ் இளைஞனின் உயிரற்ற உடல்தான். இந்த உடலை பரிசோதனை செய்த டாக்டர். சரவணபவானந்தனின் சாட்சியம் இதோ....

"நவரத்தினராசாவின் உடலில் இருபத்தைந்து வெளிக்காயங்களும், பத்து உட்காயங்களும் காணப்பட்டன. அவரின் சுவாசப்பையில் ஏற்பட்ட கண்டல்கள் அடியின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். மழுங்கிய, நீண்ட ஆயுதங்களால் காயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்புறத்திலுள்ள ஒரு காயம் மரணம் ஏற்படுவதற்கு 24 மணி நேரத்துக்குள் ஏற்படுத்தப்பட்ட காயம். இறந்தவரை அரசாங்க வைத்தியசாலையொன்றில் அநுமதித்து வைத்தியநிபுணர் ஒருவர் சிகிச்சை அளித்திருந்தால் அவர் உயிர் தப்பியிருக்கலாம்....

"....இந்தச் சடலம் குருநகர் முகாமிலுள்ள 6x5 அடி அறைக் கூண்டினுள் மல்லாந்தபடி கிடந்தது. பாயோ தலையணையோ அங்கு இருக்கவில்லை. வெறும் சீமெந்து தரையிலேயே சடலம் கிடந்தது...." இப்படி சாட்சியம் கூறியது யாழ். மேலதிக நீதவான் திரு. வரதராசா.

இத்தனை கொடிய சித்திரவதைகளை அநுபவித்து இறுதியில் தன் உயிரையே இழந்த அப்பாவி இளைஞன் நவரத்தினராசா செய்த குற்றம் என்ன? தமிழனாகப் பிறந்ததா...? அல்லது தவறுகளை தட்டிக் கேட்கும் திராணியற்ற தலைவர்களை கொண்ட இனத்தில் பிறந்ததா? இவன் செய்த குற்றம் தான் என்ன? அன்று இவ்வ செல்வத்தின் உயிர்பலியுடன் கொடூரமாக ஆரம்பித்த ஆக்கிரமிப்பு அரசின் படுகொலைகள் இன்று பகிரங்கமாகவே நடைபெறுகிறது. சத்தமில்லாமல் நவரத்தினத்தின் சடலத்தை அடக்கம் செய்துவிடுவது போன்ற பணியிலேயே எமது தலைவர்கள் ஈடுபட முற்படுவார்களானால் ஆக்கிரமிப்பு அரசின் கொடுமைகள் வளரும்; கொலைகள் தொடரும். இறுதும் மக்களின் உணர்ச்சிகளை மதிக்காது தான்தோன்றித் தறிகெட்ட தார்மீகத்துக்கு எதிராக மக்கள் சக்தியை ஒன்று திரட்டிப் போராடும் புதிய சக்தி வாய்ந்த தலைமை உருவாகும் வரை நவரத்தினராசா போல இன்றும் பல இளைஞர்களை நாம் பலிகொடுக்கத்தான் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன விடுதலை

∴ காழன் ∴

## 10. வளமும் வாய்ப்பும்

நம் கவனத்தைச் சிதறடிக்காமல், நம் போர்க்கோலத்தை மழுங்க விடாமல், நம் இனப்பெருமையை இழிவு படுத்தாமல் போராடும் மற வேங்கைகளுக்கு உலகின் ஒவ்வொரு தமிழனும் ஊக்கமும் உதவியும் புரிய வேண்டும். யூதர் போல ஒற்றுமையுணர்ச்சியும், துவண்டோருக்குத் தோள் தரும் துடிப்பும் நம்மவர் பெற்றுவிடல் வேண்டும். சூளுரைத்துப் போருக்குக் கிளம்புவது எளிதான செயலே! ஆனால், சூழலுக்கும் தூற்றலுக்கும் இடையில் ஓய்தலும் சாய்தலும் இன்றி, காய்தலும் உவத்தலும் அகற்றிப் போரிடும் மறவர்க்கே அதன் கனமும் கடுமையும் விளங்கும். தெருவில் நின்று இரண்டு படுத்திப் பேசி, பொறுப்பைத் தட்டிக் கழித்து, அவமான உணர்வைத் துடைத்தெறிந்துவிட்டு, வயிற்றைக் கழுவுவதிலேயே வாழ்க்கையைச் செலவிடுபவர்களுக்கு போரினை விளங்கச் செய்தலும் போரில் ஈடுபடச் செய்தலும் கடினமான செயலே!

'கடைகொட்கச் செய்தக்கது ஆண்மை; இடைகொட்கின் எற்றா விழுமந் தரும்"

என்ற வாய்மை வள்ளுவன் குறளுரையின்படி இறுதிவரை உறுதி மாறாது அறுதியிட்ட செயலைப் புரிந்து, கொள்கையில் வெல்லும் மனப்போக்காளரே விடுதலை மறவர்கள் ஆவார். அவருக்குத் தளமும் துணையும் மற்றவர்களாவார். இவ்விதியிலிருந்து எவ்வகை மக்களுக்கும் விலக்கில்லை.

இவர் கேட்பதெலாம் சுண்டைக்காய் அளவுள்ள ஈழத்தில் விடுதலை கிடைத்துவிட்டால் பாலும் தேனும் ஓடுமா? உலக வங்கியிடம் தாங்க முடியாத கடன் சுமையை ஏற்றிக் கொண்டு தத்தளிக்கும் மூன்றாம் உலக நாடுகளுள் உள்ளடங்கிய தமிழீழத்தில் எப்படிக் காலூன்றி, தன் தேசிய எல்லைகளைக் காத்து, பொருள் வளத்தை விருத்தியாக்கி, பங்கீட்டைச் சமமாக்கி, தமிழ் மரபை பொருளியல் கண்ணோட்டத்தில் கைவிடாது, காப்பாற்றி, தமிழீழத்தை நிலைநிறுத்திட இயலும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்க்குச் சொல்வோம். வெறும் தோட்டங்களும் கழனிகளும், அடர்ந்த காடுகளும், கடல்படு செல்வமும் மலைபடு செல்வமும், தரைபடு செல்வமும் மட்டுமே கொண்டு ஓரினம் நிலைநின்றிட இயலாது. குன்றாத வீரமும், குறையாத இளமையும் இருக்கின்ற மக்கள் இனமே காலத்தால் அழியாது நிலைநிற்கும் தகைமையன. நம் தமிழினம் அத்தகையது.

இல்லாவிட்டால் கனவுத் தீவுகளான தைத்தி, சீத்தி செசெல்சு போலவோ, ஆங்காங், சிங்கப்பூர், பார்மோசா போலவோ, கவர்ச்சிக்கோ அல்லது வணிகத்துக்கோ எம்மை விற்றுவிட்டிருப்போம். காலத்தால் அழியாத தகைமைகளைக் கொண்டுள்ள பழமையன தான் எம்மினம் இன்றும் இடர்பாதிப்புக்களுக்கு உள்ளாகாமல் தனித்துவத்தை இழக்காமல் இருக்கிறது. எனவே இத்தனை சிறப்புமிகு வளமும் வாய்ப்பும் நம் தமிழ் மரபுடன் சேர்ந்து இணையற்ற தமிழ் மரத்தில் இணைந்திருக்கும் போது விதேசி நினைத்திட வேறென்ன தேவை....?

உலகத் தமிழரின் நிலையை, தமிழரே ஈழத்துக்கு சொந்தக்காரர் என்ற உண்மையை, தமிழரைக் குடியேற்றக்காரர்களாகக் காட்ட நடக்கின்ற அவலத்தை, தமிழரால் நாகரீகப்படுத்தப்பட்ட ஆரியர்கள் இன்று தமிழரை வீழ்த்தவும் தமிழ்மொழியை மாய்க்கவும் செய்து வரும் அக்கிரமங்களை, குமரிக்கண்டம் தமிழரின் பழைமையை எடுத்துக் காட்டுவதையும் அது அழிந்த உண்மையையும் அழிந்த குமரிக்கண்டத்தின் இறுதித் துளி நிலமே இலங்கை என்பதையும் எடுத்துக் காட்டி இயக்கர், நாகர் என்பவரும் தமிழரே என்பதை நிரூபித்து, சிந்துவெளி நாகரீகம் தமிழருடையதே என்பதை விளக்கி, இலங்கை அரசின் ஆட்சி உடைந்து விரைவில் தமிழீழம் அமையப் போவது தவிர்க்கமுடியாதது என்பதை உறுதியாகக் கூறி, விடுதலையை உணராமல் வெறும் வாய் மெல்லும் போலிகளை அம்பலப்படுத்தி நம் இன்றைய அரசியல், பொருளியல் வாழ்வுக்கே புதிய ஆற்றல் தேடும் முயற்சிக்கும் நிலைக்களமாக இன்று உலகை ஈர்க்கும் தென்றலை வளர்த்ததையும் புலனாக்கிய இக்கட்டுரை இந்நூ[illegible]கிறது.

-முற்றும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

## பிரான்சு:

### அரசுக்கு எதிரான கிளர்ச்சிகள் தொடர்கின்றன!



பிரான்சின் சோசலிச அரசு தனது பதவிக் காலத்தின் இரண்டாவது ஆண்டு காலப் பகுதியை பூர்த்தி செய்துள்ள இவ்வேளையில் நாடுமுழுவதும் அரசுக்கெதிரான பலவகைப்பட்ட ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இவற்றில் மாணவர்களதும் விவசாயிகளதும் கிளர்ச்சிகள் குறிப்பிடத்தக்கவை. பல்கலைக் கழகங்களைக் கட்டுப்படுத்தும் அரசின் புதிய கல்விக் கொள்கைக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திவரும் போராட்டங்களில் பெருமளவு வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. அதுபோல தமது உற்பத்திப் பொருட்களுக்கு உயர்ந்த விலை கோரி பிரெஞ்சு விவசாயிகளும் பெரும் போராட்டங்களை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவு விவசாய உற்பத்திப் பொருட்களை நாசம் செய்து அரசுக்கு தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக பிரெஞ்சு விவசாயிகளின் கொள்வனவுச் சக்தி குறைந்து கொண்டு செல்வது குறிப்பிடத்தக்கது.

### பணவீக்கம் மீண்டும் அதிகரிக்கிறது!

சோசலிச அரசினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்த பிரான்சின் பணவீக்கம் மீண்டும் கடந்த மாதத்திலிருந்து அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவு குறிகாட்டியும் 1.4% ஆல் அதிகரித்துள்ளது. அரசு எதிர்பார்த்தபடி இவ்வாண்டு இறுதியில் பணவீக்கத்தை 8% மாக்கும் செயல் மிகக் [illegible]னதாகவே இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் கட்டுப்பாடுகளுக்கு பயன் கிட்டுகிறது.

சமீபத்தில் பணவெளியேற்றம் தொடர்பாகவும், நிதிக் கட்டுப்பாடுகள் தொடர்பாகவும் பிரான்சின் சோசலிச அரசாங்கம் விதித்த கடுமையான கட்டுப்பாடுகளுக்கு பயன் கிட்ட ஆரம்பித்துள்ளது. கடந்த மே மாத காலத்தில் முதற்தடவையாக பிரான்சின் வர்த்தகக் கடனின் அளவு ஏப்ரல் மாதத்தில் 1.5 பில்லியன் பிராங்குகளாக குறைந்துள்ளது. இத்தொகை மார்ச் மாதத்தில் 6.5 பில்லியன் பிராங்குகளாக இருந்தது. அத்துடன் இறக்குமதிப் பொருட்கள் 6% ஆல் குறைந்துள்ளன. அதே வேளையில் ஏற்றுமதி 2% ஆல் அதிகரித்துள்ளது. இது பிரான்சுப் பொருளாதார சீர்திருத்தலின் அறிகுறியாகக் கருதப்படுகிறது.

## பிரித்தானியா:

### பிரித்தானியாவில் இம்மாதம் பொதுத்தேர்தல்.



குறிப்பிட்ட ஆட்சிக்கால முடிவுக்கு முன்பாகவே இம்மாதம் 9ம் திகதி பிரித்தானியாவின் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் அறிவித்துள்ளார். தமக்கு சாதகமாகவுள்ள சூழ்நிலை காரணமாகவே இவர் தேர்தலை உடன் நடத்த தீர்மானித்துள்ளார். மீண்டும் இவரது தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சியினரே பதவிக்கு வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் உட்கட்சிப் பூசல்களால் சிதைந்திருந்த எதிர்க்கட்சியாகிய தொழிற்கட்சிக்கு சமீபகாலமாக கிடைத்துவரும் ஆதரவு இத்தேர்தலை கடும் போட்டியானதாக்கியுள்ளது. தட்சரின் ஆட்சிக்காலத்தில் பணவீக்கம் குறைந்தபோதும் பெருந்தொகையானோர் 13.3 வீதமானோர் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு தொழில் வழங்குவதற்கான எந்தத் திட்டங்களையும் திருமதி தட்சர் அறிவிக்கவில்லை. அத்துடன் தொழிற்சங்கங்கள் மீது இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளதும், அமெரிக்க ஏவுகணைகளை பிரித்தானியாவில் நிலைகொள்ளச் செய்ய தட்சர் முற்படுவதும் மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. எது எப்படியிருப்பினும் சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி 10% வாக்கினால் கன்சர்வேட்டிவ் கட்சியே முன்னணியில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா:

### அமெரிக்க காங்கிரசில் றீகன் நிர்வாகத்தின் செயற்பாடுகள் குறித்து கடும் கண்டனம்!

அமெரிக்க காங்கிரசின் சமீபத்திய விவாதங்களின் போது றீகன் நிர்வாகத்தின் செயற்பாடுகள் குறித்து கடுமையான கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. காங்கிரசின் அனுமதியில்லாமல் இரகசியமாக நிகரகுவாவின் அரசை கவிழ்க்கும் சதியில் ஈடுபட்ட கொரில்லாக்களுக்கு பெருந்தொகையான பணத்தையும் ஆயுதங்களையும் வழங்கிய செயலே கடுமையாக விமர்சிக்கப்பட்டது. அத்துடன் எல்சல்வடோரின் இடதுசாரிப் போராளிகளுடன் சல்வடோர் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் பல உறுப்பினர்களால் எழுப்பப்பட்டது. அதேவேளையில் சல்வடோர் அரசாங்கத்துக்கு றீகன் அளிக்க விரும்பிய 63 மில்லியன் டொலர்களை அளிப்பதற்கான அனுமதியையும் காங்கிரஸ் மறுத்துள்ளது.

## சோவியத் யூனியன்:

### சோவியத்தில் உற்பத்தி அதிகரிக்கிறது.

சோவியத் தலைவர் அந்திரப்போவ் நாட்டின் ஊழல்களைக் களைந்து உற்பத்தித் திறனை அதிகரிக்க எடுத்த நடவடிக்கைகளுக்கு பயன் கிட்ட ஆரம்பித்துள்ளது. தொழிற்சாலைகளிலுள்ள சீர்கேடுகள் களையப்பட்டு நாட்டின் மொத்த உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்காவிடம் சோவியத் யூனியன் கொள்வனவு செய்யும் தானிய அளவிலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் பெற்றோல், எரிவாயு, தங்கம் போன்ற பொருட்களை உலகில் அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக சோவியத் யூனியன் விளங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அமெரிக்காவிற்கு சோவியத்யூனியன் எச்சரிக்கை

கியூபாவில் ஊடுருவல் நடத்தும் பயமுறுத்தலை நிறுத்துமாறு சோவியத்யூனியன் அமெரிக்காவை எச்சரித்துள்ளது. கியூபா மக்கள் தனித்தவர்களல்ல. அவர்களுக்கு சோவியத் யூனியினதும் ஏனைய சோஷலிச சக்திகளதும் ஆதரவு என்றும் உண்டென்றும் சோவியத் அரசு கூறியுள்ளது. சமீபத்தில் அமெரிக்க சனாதிபதி கியூபா அரசை [illegible] தாக்கிப் பேசியதை அடுத்தே இவ்வெச்சரிக்கை விடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லெபனான்:

### இஸ்ரேல் - லெபனான் ஒப்பந்தத்திற்கு கடும் எதிர்ப்பு!

சமீபத்தில் அமெரிக்காவின் அனுசரணையுடன் இஸ்ரேல் லெபனானுடன் செய்து கொண்ட பாதுகாப்பு, வர்த்தகம் போன்றவை தொடர்பான ஒப்பந்தம் அரபு நாடுகளின் பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. குறிப்பாக சிரியா இவ்வொப்பந்தத்தை வன்மையாகக் கண்டித்துள்ளதுடன் லெபனானில் நிலை கொண்டுள்ள தனது படைகளை தான் மீள அழைக்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளது. அதே வேளையில் லெபனானில் கொரில்லாத் தாக்குதல்களால் தொடர்ந்து இஸ்ரேலியப் படைகளுக்கு ஏற்பட்டு வரும் இழப்புகள் பிரதமர் பெகினின் பிடிவாதத்தை தளர்த்தி இஸ்ரேலியப் படைகளை மீள அழைக்கும் நிலையை ஏற்படுத்தி வருகின்றன.

## தென்னாபிரிக்கா:

### மொசாம்பிக் தலைநகர் மீது தென்னாபிரிக்கா தாக்குதல்!

மொசாம்பிக் தலைநகரான மபூட்டோ மீது தென்னாபிரிக்கா பெருந்தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது. ஆபிரிக்கத் தேசிய மன்றத்தின் கொரில்லாத் தளங்களை தென்னாபிரிக்கப் படைகள் நிர்மூலமாக்கின. தென்னாபிரிக்காவின் இந்த வெறியாட்டத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர். 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இச்செயலை சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

## நிக்கரகுவா:

### அமெரிக்காவிற்கு எதிராக இலட்சக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம்.

கிளர்ச்சியாளர்களுக்கு உதவியளித்து நிக்கரகுவாவின் [illegible]னித்திய புரட்சி அரசை கவிழ்க்க முயலும் அமெரிக்க ஜனாதிபதி றீகனின் சதிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பெரும் ஆர்ப்பாட்டமொன்று நிக்கரகுவாவில் மேற்கொள்ளப்பட்டது. நிக்கரகுவாவின் தலைநகராகிய மனாகுவாவில் நிகழ்த்தப்பட்ட இவ்வார்ப்பாட்டத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கொண்டதுடன் தமது புரட்சிகர அரசைக் காப்பாற்றும் போருக்கு நாம் எப்போதும் தயாராகவேயிருப்பதாக அறைகூவல் விடுத்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான்:

### பாகிஸ்தானில் தொடர்ந்து மனித உரிமை மீறல்கள்

பாகிஸ்தானில் தொடர்ந்து மனித உரிமை மீறல்களை சியாஉல்ஹக் தலைமையிலான இராணுவ அரசு மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஜியாவினது அரசியல் எதிரிகள் சிறைவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதாகவும் பலர் கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அத்து-டன் காரணமற்ற கைதுகளும் கடுமையான தண்டனைகளும் அதிகரித்து வருவதாகவும் அரசியல் எதிரிகள் தொடர்ந்து பழிவாங்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## இந்தியா:

### வட இந்தியாவில் புயல்! 31 பேர் மரணம்.

வட இந்தியாவில் வீசிய புயலால் 31 பேர் கொல்லப்பட்டனர். பயிர்களும், உடைமைகளும் நாசமாகின. பஞ்சாப், உத்தரப் பிரதேசம், ஹரியானா ஆகிய மாநிலங்களிலேயே புயல் வீசியுள்ளது. அதேவேளையில் இமாசலப் பிரதேசத்தில் பெய்த கடும் மழையால் 26 பேர் மரணமடைந்துள்ளனர். பெருமளவு சொத்துக்கள், பயிர்கள் சேதமடைந்துள்ளன.

### இந்தியாவின் மூன்றாவது சுதந்திரவர்த்தக வலயம் தமிழகத்தில்.

இந்தியாவின் மூன்றாவது சுதந்திர வர்த்தக வலயம் தமிழகத்தில் மீனம்பாக்கம் அருகே அமையவுள்ளது. இதற்கான அங்கீகாரத்தை மத்திய அரசு தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. இதுதான் தென்னிந்தியாவின் முதலாவது வர்த்தக வலயமாக அமையும்.

### இந்தியாவின் முதல் மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழகத்தில் நிர்மாணிக்கப்படும்.

இந்தியாவின் முதலாவது மருத்துவப் பல்கலைக்கழகம் தமிழகத்தில் சென்னைக்கு அருகே ஐந்தரைக் கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும். தமிழகத்தில் இப்பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான வாய்ப்பை ஆராய்ந்த குழு தனது அறிக்கையை தமிழக முதல்வரிடம் கையளித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழத்தில் தொடர்கிறது தறிகெட்ட தார்மீகத்தின் இராணுவ வெறியாட்டம்....



தமிழ் ஈழத்தின் பல பகுதிகளிலும் ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசபடைகள் வெறியாட்டம் ஆடி வருகின்றனர். மக்கள் வீதியில் நடமாடுவதே ஆபத்தானதாகக் கருதப்படுகிறது. இராணுவம் வீடுவீடாகப் புகுந்து இளைஞர்களைத் தாக்குகிறது... கைது செய்கிறது... இதோ அந்தக் கொடுமைகளின் சில துளிகள்....

- நீர்வேலிக் கொள்ளை வழக்கில் தேடப்படும் சிறி சபாரத்தினத்தின் வீடு கல்வியங்காட்டில் இராணுவத்தினரால் அழித்து நொருக்கி தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.
- யாழ் நகரிலும் சூழவுள்ள பகுதிகளிலும் இராணுவத்தினர் பொதுமக்களை பொல்லாலும், கற்களை வீசியும் தாக்கிவருகின்றனர். இதனால் பெண்கள், முதியவர்கள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.
- கிளிநொச்சியில் ஆனையிறவு முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அப்பாவி மக்களையும், அவர்களது வாகனங்களையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.
- 19ம் திகதி காலை கொழும்பு நோக்கிச் சென்ற யாழ்தேவி புகையிரதத்தின் பயணிகள் பளைக்கும் - பரந்தனுக்குமிடையில் வைத்து 'சிவிலுடையாளர்களால்' கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவர்களது உடைமைகளும் தூக்கியெறியப்பட்டன.
- பம்பலப்பிட்டியில் வைத்து நான்கு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- மட்டுநகரில் விமானப்படையினர் புதுநகர், வலையிறவுப் பகுதி மக்கள் மீது தொடர்ந்து இரவுகளில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூட உதவியாளர் பரந்தாமன் நீண்ட காலத் தடுப்புக் காவலிலிருந்து நீதியரசரால் விடுதலை செய்யப்பட்ட உடனேயே மீண்டும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடபகுதியைச் சேர்ந்த நான்கு வாலிபர்கள் நுவரெலியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
- மன்னாரில் பல இடங்களில் இராணுவத்தினர் பாதசாரிகள் மீது கற்களை வீசி காயப்படுத்தியுள்ளனர்.
- சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞர்களாகிய கணபதிப்பிள்ளை, முருகேசு, திருவாசகன் ஆகியோர் கண்டியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.
- வடபகுதியில் தொடர்ந்து நடைபெறும் இராணுவத் தாக்குதலால் தினந்தோறும் 5 அல்லது 6 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.
- கல்வியங்காட்டில் சோதனை என்ற போர்வையில் இராணுவம் வெறியாட்டம் ஆடியுள்ளது.
- யாழ்ப்பாணத்தில் வைத்து வவுனியா இளைஞர்களான நடேசலிங்கம், ஜெயபாலன் ஆகியோர் இராணுவத் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
- இராணுவ முகாம்களில் வைத்து தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் நிர்வாணமாக்கப்பட்டு கடும் சித்திரவதைகட்கு உள்ளாகி வருகின்றனர்.
- பருத்தித்துறையிலுள்ள கல்லூரி அதிபர் ஒருவரும் அவரது மகனும் புலிப்படையைச் சேர்ந்தவர்கள் என்று காரணம் கூறி கைது செய்யப்பட்டுள்ளனர்.
- ஈழநாடு ஆசிரியர் குழுவைச் சேர்ந்த மகாதேவாவின் 18 வயது மகனும் கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளான்.

இத்தனை கொடுமைகள் எங்கள் மக்களுக்கு இழைக்கப்படுகையில் இங்கே நாம் அக்கறையற்ற பார்வையாளர்களாக இருக்கலாமா...?


சிவகுமாரன்

"மீண்டும் பிறப்பேன் தமிழீழ விடுதலைக்குப் போரிடுவேன்"

—தியாகி சிவகுமாரன்

நோய் நொடியால்
மாண்டவர்கள் கோடிகோடி
நூற்றிலொரு பெயர்தானும்
ஏட்டில் இல்லை!
தாய் நாடு வாழ்கவென
மடிந்த பேர்கள்
சரித்திரத்தில் பொன் எழுத்தால்
நிலைத்து நிற்பார்!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Ligue Communiste Révolutionnaire**

# சர்வதேசிய ரீதியில் பேரவையின் தமிழ் ஈழப் பிரச்சாரம்.

அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுக் கொண்டிருக்கும் சர்வதேச விடுதலைப் போராளிகளை - அவர்கள் பிரதிநிதிகளை ஒன்றாகச் சந்திக்கின்ற வாய்ப்பும் அதன் மூலம் - தமிழ் ஈழப் பிரச்சாரத்தை - சர்வதேசிய ரீதியில் எடுத்துச் செல்கின்ற முயற்சியில் தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு) ஈடுபட்டது. பேரவை உருவாகிய குறுகிய காலத்தில் ஆற்றிய பெருமுயற்சியாக இவை இதனைக் கொள்ளவேண்டும்.

உலகமெல்லாம் நாள்தோறும் கேட்கின்ற விடுதலைக் கீதங்களுடன் தமிழீழத்தின் விடுதலைக் கீதமும் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதில் பேரவையின் முயற்சி வரவேற்கக் கூடியதே. விடுதலை வேள்வித் தீயில் வெந்து கொண்டிருக்கும் உண்மை விடுதலை விரும்பிகளுக்கு பேரவையின் ஆதரவை - வெளிப்படுத்தியதுடன் - 'தமிழ் ஈழம்' பற்றிய உண்மை நிலையை - விளக்கி - அவர்கள் ஆதரவையும் - அறிவுரைகளையும் - பெற்று - பேரவை சிறப்பாகச் செயற்பட்டது.




மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பெற்றுள்ள தமிழீழ தலைப்பை பேரவைப் பிரதிநிதிகள் மகிழ்வுடன் பார்க்கும் காட்சி.

கடந்த மே மாதம் 23ம் திகதி பிரான்சிலுள்ள வல்வோலம் எனும் இடத்தில் நடைபெற்ற அனைத்துலக புரட்சிகர கம்யூனிச இயக்கங்களின் மாநாட்டின் 3ம் நாள் நிகழ்ச்சியில் 'இலங்கை வாழ் தமிழர்களின் இன்றைய பிரச்சினைகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பேரவை பங்குபற்றியது.

மலையகத் தமிழர்களின் வாழ்க்கைத் தரம் - மலையகப் பெண்களின் அவல நிலைகள் பற்றி உரையாற்றிய இங்கிலாந்து நாட்டுப் பிரதிநிதி இலங்கைத் தமிழர்கட்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திப் பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி உரையாற்றும் இங்கிலாந்துப் பிரதிநிதி.

அவரைத் தொடர்ந்து முன்னவரை ஆதரி
பேசிய இத்தாலியப் பிரதிநிதி தமிழ்ப்ப
யில் அமைந்துள்ள திருமலை துறைமுகத்
அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கடற்ப
த்தளமமைக்கச் செய்யும் முயற்சிகளை
அதன் மூலம் - தமிழீழத்தில் - அயல் நாடுகளி
றிப்பாக இந்துசமுத்திரத்தில் ஏற்பட்
கின்ற அமைதியற்ற சூழ்நிலையையும் சுட்டி
காட்டினர்.

இவர்களது பேச்சுக்களுக்குப் ப
வளித்துப் பேசிய பேரவையின் செயலாளரு
செயற்குழு உறுப்பினரும் 'தமிழ் மக்களி
சுயநிர்ணய உரிமை' தமிழ் ஈழத்தில் தான்
சாத்தியமாகும்
என்பதை வலி
யுறுத்திப் பே
சினார்.


இந்துசமுத்திரத்தில் ஏற்படப்போகும் அமைதியற்ற சூழ்நிலைபற்றி இத்தாலியப் பிரதிநிதி.


பாலஸ்தீன - சல்வடோர் - கௌத
மாலா - அயர்லாந்து விடுதலை இய
க்கப் பிரதிநிதிகள் உட்பட -
200 விடுதலை இயக்கங்களின்
பிரதிநிதிகள் கலந்துகொண்ட
இம் மாநாட்டில் ஒவ்வொரு இய
க்கப் பிரதிநிதிகளையும் - தனித்த
னியாக, பேரவைப் பிரதிநிதிகள்
சந்தித்து தமிழீழப் பிரச்சாரத்தை
செய்தபோது அவர்கள் மிகுந்த
அக்கறையுடன் கேட்டு இயக்க
தொடர்புகளை ஏற்படுத்த முன்
வந்தனர்.

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னால் தமிழ் இனத்தின் உ
ரிமைகளை அழித்தொழிக்கும் - முயற்சியின் முதல் அடியாக - மலை
யகத் தமிழர்களின் பிரஜாவுரிமைகளைப் பறித்து - இலட்சக்
கணக்கான மலையகத் தமிழர்களை நாடற்றவர்களாக்கியதி
லிருந்து - இன்று வரை - மாறி மாறி பதவிக்குவந்த சிறீலங்கா
அரசாங்கங்கள் - தமிழர்களை அடக்கி ஒடுக்குவதில் - கையாண்ட
ஒவ்வொரு நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தும் பிரசுர
மொன்றையும் - சிறீலங்கா அரசின் இன அடக்கல் கொள்கை


பிரெஞ்சுப் பிரதிநிதியின் உரை.

களையும் கொடுமைகளையும் உலகறிய
செய்யும் வகையில் பேரவை பிரசுர
மொன்றை ஆங்கிலத்தில் வெளியிட்டு
மாநாட்டின் பிரதிநிதிகட்கும் பார்
வையாளர்கட்கும் விநியோகித்து - அவர்
களின் கவனத்தை ஈழப் பிரச்சனையின்
பால் ஈர்த்தது மாத்திரமன்றி எம்மக்
களின் இன்றைய நிலையை உணர்த்
தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேள்விகட்கு பதிலளித்து
பசும் பேரவை பிரதிநிதி.

சமவுடமைப் பாதையில் மக்களின் மனங்களில் புரட்சி வித்துக்களைத் தூவி அடக்குமுறையாளர்களின் அத்திவாரத்தை தகர்த்துவரும் இத்தகைய விடுதலை இயக்கங்களுக்கு ஈழப் பிரச்சினையை எடுத்து விளக்கி அவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட இச்செயல் பேரவைக்குக் கிடைத்த குறிப்பிடத் தக்க வெற்றி என்றே கொள்ளலாம்.



ாலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதியும்
ரவை உறுப்பினர்களும்



அயர்லாந்து விடுதலை இயக்கப் பிரதிநிதி.

-கோமதி-

* * * * * * * * * * * * * * *

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ்முரசு' தனது பங்களிப்பை சரியாகச் செய்ய 'தமிழ் முரசை' நெறிப்படுத்துங்கள். உங்கள் ஆக்கங்களை அனுப்புவதற்கும்... 'தமிழ் முரசு'டனான சகல தொடர்புகட்குமான முகவரி

THE EDITOR
'TAMIOUL MOURASSOU'
10, RUE DES MARTYRS.
75009 - PARIS. (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✱ இங்கும் . . . அங்கும் . . . ✱

## சிறீலங்காவில். . .



சிறீலங்காவின் தலைநகரான கொழும்புக்கு வந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சி.வி.66 விமானந்தாங்கிக் கப்பலைப் பார்வையிட்ட களிப்புடன் சிறீலங்கா எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் தம்பதிகளும் பிரதமர் பிரேமதாசா தம்பதிகளும்.

## தமிழீழத்தில் . . .

" . . . . எமது பாரம்பரியப் பிரதேசமான திருமலை அந்நியரிடம் பறிபோவதை நாம் தடுக்க வேண்டும். திருமலைத் துறைமுகத்தை அமெரிக்க அரசுக்குத் தாரைவார்க்க முயலும் ஐ.தே.க. அரசின் செயலை நாம் நிறுத்த வேண்டும். இதற்கு திருமலை நகரின் நிர்வாகம் எம்மிடம்" - த.வி.கூட்டணியிடம் இருக்க வேண்டும் . . . .

<உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரத்தின் போது திருமலையில் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்.>

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழீழத்தின் இதயத்திற்கு மீண்டும் தீயிடப்பட்டிருக்கிறது. தமிழீழத்தின் பல பகுதிகளிலும் சிறீலங்கா இராணுவத்தினர் வெறியாட்டம் ஆடியுள்ளனர். எரிப்புக்கள்... அழிப்புக்கள்... சொத்துச் சூறையாடல்கள்... தாக்குதல்கள்... தொடர்கின்றன. சிறீலங்கா ஆயுதப்படையினரின் வன்முறைகள் வரம்பை மீறிவிட்டன. அப்பாவி தமிழ் மக்கள் படும் அவலங்கள் தினசரி புதிய வெளியீடுகளாகின்றன.

இவை கண்டும் ஈழத்தமிழ்மகனே நீ ஈழத்திலும், வெளிநாடுகளிலும் தமிழீழப் போராட்டத்தின் பங்காளனாக மாறாமல் வெறும் பார்வையாளனாக இருப்பாயானால் அடிமை விலங்குகளை மட்டும் சொத்தாகக் கொண்ட இனமாகத்தான் எமது இனம் இருக்கும்.

வெளியீடு

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org